யாழ்ப்பாணம்

# கிழக்கில் 90 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டனர் இவர்களில் 35 பேர் காணமல் போய்விட்டனர்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 18 இதழ் 266

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 03 — 11 — 1992


(கொழும்பு)
கிழக்கு மாகாணத்திலுள்ள வெல்லாவெளியில் அண்மையில் பாதுகாப்பு படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது 90 தமிழ் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு இவர்களில் 55பேர் விடுதலை செய்யப்பட்டதாகவும்,
(4ம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச் சபையிடம் பெற்றோர் முறையீடு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு - வெல்லாவெளிப் பகுதியில் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணமல் போன 35 தமிழ் இளைஞர்களையும் மீட்டு தருமாறு சர்வதேச மன்னிப்புச்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி படகுசேவை தடைப்பட்டதாக தகவல்

(யாழ்ப்பாணம்)
கிளாலி கடற்பாதைப் பயணம் நேற்றுமுன்தினம் முதல் தொடக்கம் தடைப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கொழும்புப் பயணிகள் அங்கிருந்து இக்கரைக்கு வரமுடியாத நிலையில் தரித்து நிற்கின்றனராம்.
(4-ம் பக்கம் பார்க்க)

# ★ யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர டிசம்பர் வரை படையினருக்கு அரசு காலக்கெடு வழங்கியது

## பிரதமர் அறிவிப்பு

(வவுனியா)

வடக்கு-கிழக்கு யுத்தத்தை, டிசம்பர் மாதத்திற்குள் (அடுத்த மாதம்) முடிவுக்குக் கொண்டுவருமாறு பாதுகாப்புப் படையினருக்குப் பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா காலக்கெடு வழங்கியுள்ளார்

வவுனியாவுக்கு விஜயம் செய்த பிரதமர் திரு. விஜயதுங்க, தச்சன்குளம் பிரதான இராணுவ முகாமில் பெருமளவு படையினர் மத்தியிலும், அதிகாரிகள் மத்தியிலும் உரையாற்றுகையில் இந்த காலக்கெடுவை வழங்கினார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அரசும் அகதிகளை கட்டுப்படுத்தும்

(லண்டன்)
பிரிட்டனுக்குள் வெளிநாட்டு அகதிகள் வருகையை கட்டுப்படுத்துவதற்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் புதிய சட்டமொன்றுகொண்டுவரப்பட இருக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு 5000 ஆக வந்த அகதிகள் இப்பொழுது ஆண்டு ஒன்றுக்கு 50,000 அகதிகளாக அதிகரித்துள்ளதோடு இவர்களில் கூடுதலானோர் பொருளாதாரம் தேடுவதற்கு வருகின்றார்கள் என்ற கார
(4-ம் பக்கம் பார்க்க)

## அடுத்து வரும் மாதங்களில் பாரிய யுத்தம் ஏற்படலாம்?

(கொழும்பு)
எதிர்வரும் மாதங்களில் வடக்கு-கிழக்கு யுத்த முனைகளில் போரிடும் இரு தரப்பினருக்கும் இடையில் பெரும் இழப்புக்கள் ஏற்படும் விதத்தில் போர் நடவடிக்கைகள் இடம் பெறலாமெனச் சில இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிராக உடனடி வெற்றி வாய்ப்பு இராணுவத்திற்குக் கிடைப்பது, மிக அரிதானது என வேறும் சில அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது வடக்குக்-கிழக்கில் நடைபெறும் யுத்தம், இறுதிக் கட்டத்திற்குள் நுழைந்துள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ள
(4-ம் பக்கம் பார்க்க)

## ● கிழக்கில் காடுகளிலிருந்து படையினர் வாபஸ்?

(கொழும்பு)
கிழக்கில் காடுகளிலிருந்து படையினர் வாபஸ் பெறப்பட்டு வருவதாகவும். அவர்கள் நகர்ப்புறங்களில் குவிக்கப்படுவதாகவும், இதனால் பெரும் பாதிப்பு ஏற்படுமென திம்புல ல பகாநாயக்க தேரரான வண. கதலகம கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்படாது விடின், இப்பகுதிகளிலிருந்து சிங்களவரும், முஸ்லிம்களும் உடனடியாக வெளியேறும் சாத்தியங்கள் உண்டு எனவும் கூறினார்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கை ஓங்கிவருவதைத் தடுக்கவேண்டும் எனவும் அரசுக்கு எச்சரித்துள்ளார். (சி)

## ஸ்ரீலங்கா படைகளில் சேர முஸ்லிம் இளைஞர்கள் மறுப்பு

(கொழும்பு)
சிறிலங்கா படைகளில் சேர்வதற்கு முஸ்லிம் இளைஞர்கள் மறுப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

எல்லைப்புற கிராமங்களில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கென சிறிலங்கா படையில் சேருமாறு முஸ்லிம் இளைஞர்களுக்கு கூட்டுப்படை தளபதி ஹமில்டன் வணசிங்க பல முஸ்லிம் அமைப்புகள் ஊடாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இராணுவ தளபதியின் இந்த அழைப்பு கடிதம் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற முஸ்லிம் அமைப்பொன்றின் கூட்டத்தில் வாசித்து காண்பிக்கப்பட்டது

இதேவேளை சிறிலங்கா படைகளில் சேருமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்
[4ம் பக்கம் பார்க்க]

## அரசுக்கு எதிராக அம்பாறை எம். பி. வழக்கு

(கொழும்பு)
அம்பாறை மாவட்ட எம். பி. ஒருவர் அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்த எம். பி. நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இதன் காரணமாக நாடாளுமன்றில் புதிய சட்டமூலமொன்றை கொண்டுவர வேண்டியுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்துள்ளார். (சி)

| |
|---|
| சூழல் எமது சொத்து — இனிய கனிகள் நமது சத்து |

## லண்டனில் இருந்து ஜே.வி.பி. தலைமையகம் தென் இந்தியாவிற்குமாற்றம்

(கொழும்பு)
ஜே. வி. பியின் தலைமையகம் தற்போது லண்டனிலிருந்து தென். இந்தியாவிற்கு மாற்றப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இதனை மாற்றியுள்ளதுடன் பெரும் கொள்ளைகளை நடாத்தி இயக்கத்திற்கு நிதிதிரட்டுமாறு இலங்கையிலுள்ள உறுப்பினர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல ஜே. வி. பி. யினர் தமிழ் அகதிகளுடன் ஏற்
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனையாகின்றது

சித்திரம்-ஆண்டு II, சைவ நெறி ஆண்டு 10, 11 கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் ஆறு படை வீடு, இவை யாவற் றிற்கும் வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவு வழங்கப்படும். ஒவ்செட் படத்துடனான கலண் டர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும், விலாசம் பதிப் பித்தும் பெற்றுக்கொள்ள லாம். ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை. (ஏ-2542)

### வெளிவந்துவிட்டது

''மாற்றம்'' காலாண்டு மக்கள் சஞ்சிகை சிறுகதை, பொதுஅறிவு, கட்டுரைகள், போட்டிகள் கொண்டது. ரூபா 10-00 ஆண்டுச்சந்தா 35-00 பிரபல புத்தகசாலை களில் கிடைக்கும். தமிழ்த் தாய் மன்ற வெளியீடு. (சி-6946)

### நாளை செவ்வாய் மாற்றம்

ராகு கேது செவ்வாய் மாற்றங்கள் 04-11-92 முதல் உங்களுக்குஎப்படி? கைரேகை சாஸ்திரமும் ரூ. 7/50- எங் கும் கிடைக்கும். பாடசாலை உபகரணங்களுக்கு: கிருஷ்ண சாமி புத்தகசாலை, நவீன சந்தை, யாழ்ப்பாணம். மொடேர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச்சந்தி, (சி 6947)

### ஆண்டு 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக் கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை 07-11-92 சனி மு. ப 8-00 மு. ப. 10-00 நடைபெறும். ஆண்டு 6 அனு மதிப்பரீட்சைக்கான துரித மீட்டற்பயிற்சியையும் (விடை களுடன்) மாதிரி வினாத்தாள் களையும் பெற்றுக்கொள்ள லாம் மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6948)

### இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று சிவகுருநாத குரு பீட சுவாமிகள் ஸ்ரீமத் மகா தேவா சுவாமிகளது 50வது குருபூசை தினமாகும்.

## இராசி பலன்

03-11-1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 18)

நவமி முழுவதும் திருவோ ணம் காலை 6-14 வரை சித்த யோகம் இராகுகாலம் மாலை 3-04 முதல் மாலை 4-34 வரை சுபநேரம் காலை 10-34 முதல் 12-04 வரை.

மேடம்: பெரியோர் மரி யாதை, நன்கொடை, சந் தோசம்.

இடபம்; நிர்ப்பந்தம், சரீ ரப் பிரயாசை, உத்தியோக பங்கம்.

மிதுனம்: மனக்கவலை, ரோக பீடை, மானபங்கம்.

கடகம்: தனலாபம், மன மகிழ்ச்சி, காரியசித்தி.

சிங்கம்: தர்மசிந்தனை, சத் துரு வெறுப்பு. விருந்து.

கன்னி: வழியில் இடையூறு காரிய நாசம், அலைச்சல்.

துலாம்: நம்பிக்கை மோசடி வாக்கு பகை, பணமுடை.

விருச்சிகம்: நற்கீர்த்தி, பெண் நன்மை, பதவி உயர்வு.

தனுசு: மனசங்கடம், காரிய தாமதம், வெறுப்பு.

மகரம்: நண்பர் உதவி, சுப காரியம், தொழில் சிறப்பு

கும்பம்: கீழ்ப்படிதல், காரிய பகை, புத்தி தடுமாற்றம்.

மீனம்: வெளியூர் பயணம், சகோதர உதவி, குடும்பசுகம்

— ஜோஸ்யர்

## யா/இராமநாதன் கல்லூரி

மருதனமடம்

## ஆண்டு 6 அனுமதி

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 4-11-92 விண்ணப்பப்படிவங்களை ரூபா 25/- செலுத்தி கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள லாம்.

அனுமதி அட்டைகளை 11-11-92ல் பெற்றுக் கொள்ளவும்.

பரீட்சை நடைபெறும் திகதி 16-11-92

அதிபர்.

(ஏ-2559)

## 90ஆம் நாள்

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வி

## தம்பிராசா சர்விழி (கிளி)

(ஏழாலைமேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை ஆண்டு 5)

மலர்வு: 19-07-1982 உதிர்வு: 6-08-1992

''கடவுள் தனக்கு பிரியமானவர்களை
இளமையிலே அழைத்துக் கொள்கிறார்''

எங்கள் அன்புச் செல்வம் சர்விழியே!
மாதம் மூன்று மறைந்தது
எங்கள் மனது உங்களை மறக்கவில்லை
மண்ணில் நீங்கள் மறைந்தாலும் எம் கண்ணில்
நீங்கள் நடமாடும் காட்சிதான் மறைந்திடுமா?
ஆண்டுகள் பல சென்றாலும் எங்கள் இதயத்தில்
நீங்கள் எங்களுடன் வாழ்கின்றீர்கள்.

இறைவனடி சேர்ந்த தினத்தன்று எங்களுக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவி னர், நண்பர்கள் கண்ணீர்அஞ்சலிகள்வெளியிட்ட உறுப் பினர் அனைவருக்கும் எம் நன்றிகள் அத்தோடு (3-11-92)இன்றுசெவ்வாய்க்கிழமைநடைபெறும் அந்தியேட்டி நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவேண்டு மென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்

திரு. நா. தம்பிராசா குடும்பத்தினர்

கோட்டைக்காடு,
மல்லாகம்.

(சி-6942)

## பலாலியிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல் மக்கள் இடம்பெயர்வு

(பண்டத்தரிப்பு)

பலாலி இராணுவ முகாமி லிருந்து நேற்று முன் தினம் இரவு தொடர்ந்து பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது. பண்டத்தரிப்பு சில்லாலை, பிரான்பற்று பகுதி களில் இவை விழுந்து வெடித் தன. பல வீடுகளும் கட்டிடங் களும் இந்த ஷெல் தாக்குதல் களினால் பலத்த சேதமடைந் ததாக அறியப்படுகின்றது.

ஏற்கனவே இப்பகுதி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து சென்றுள்ளமை யால் உயிராபத்து ஏற்பட வில்லை.

கடந்த சில தினங்களாக இரவு வேளைகளில் பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டு வருவதால் வீடுக ளில் தங்கியிருந்த வடலிய டைப்பு, பிரான்பற்று, தொட்டிலடி ஆகிய இடங்க ளைச் சேர்ந்த மக்கள் பாது காப்பு கருதி இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். (72)

## 100 மாணவருக்கு சைவசமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரி இந்து மாணவர் மன்றம் அண்மை யில் கல்லூரி மாணவர்கள் 100 பேருக்கு சைவசமய தீட் சையை பிரதமகுரு விநாயக மூர்த்தி வழங்கினர்.

## விபத்தில் காயம்

(புலோலி)

நாகர் கோவில் பகுதியில் சைக்கிளால் மோதப்பட்ட வாலிபர் ஒருவர் வயிற்றில் பலத்த காயத்துடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்பருட்டியைச் சேர்ந்த எஸ். ஜெயகாந்தன (19வயது) என்பவரே இவ்வாறு வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டவராவர். 61)

## வெளிவந்துவிட்டது

ஜேயல் கல்லூரி ஆசிரியர் இ. செல்வநாயகத்தின்

க. பொ த. (சாதாரண)

★ வர்த்தகம் ★

கடந்தகால பரீட்சை வினவிடைகள்

1980 — 1991 வரை

வியாபாரிகளுக்கு கழிவுண்டு

கிடைக்குமிடம்:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-2558)

## சைவ சமய தீட்சை

காலம்: 6-11-92 வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 8 மணி

இடம்: திருவண்ணைநகர் அருள்மிகு வாலாம் பிகா சமேத விசுவலிங்க வைத்தீஸ் வரசுவாமி திருக்கோயில் (வண்ணை சிவன்கோயில்)

தீட்சை பெற விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் தொடர்புகொள்ளவும்.

நிர்வாகசபை.

திருக்கோயில்.
31-10-92

(ஏ-2553)

## மிற்சுபிஷியில் சலுகைகள்

மிற்சுபிஷி படச்சுருள்களை கொழும்பு பிரதியாக்கலிற்கு எம்மிடம் தருவதன் மூலம் இரண்டு வகையான விசேட

"தள்ளுபடி விலை" சலுகைகளை

பெற்றுக் கொள்ளுங்கள்

விபரங்கள் நேரில்

## கலக்சி புகைப்பட சேவை

337, முதலாவது மாடி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-2550)

## ★ இன்று அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# கடுமையான போட்டியை எதிர்கொள்ளும் புஷ் - கிளிங்ரன்; யார் வெற்றிபெறுவார்?

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. இம்முறை அமெரிக்க அதிபர் பதவிக்கு மூவர் போட்டியிடுகின்றனர்.

தற்போது பதவியிலிருக்கும் திரு ஜோர்ஜ்புஷ் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகவும் ஆர்கனுஸ் கவர்னர் திரு. பில் கிளின்ரன் ஜனநாயகக்கட்சி வேட்பாளராகவும், திரு. றெஸ் பெரோட் சுயேட்சை வேட்பாளராகவும் போட்டியிடுகின்றனர்.

உலகின் பெருமைமிக்க பதவி, சக்திவாய்ந்த பதவி, அதி உயர்ந்த ஊதியத்தை அள்ளித்தரும் பதவி என்றெல்லாம் வர்ணிக்கப்படும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் யார் வெற்றி பெறப்போகிறார்கள் என்று உலகின் அனைத்து மக்களுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும் தேர்தலில் நேரடிப்போட்டி கடுமையான போட்டி, செல்வாக்குமிக்க போட்டி என்று எடுத்துக் கொள்ளும்போது புஷ்ஷுக்கும், கிளிங்ரனுக்கும் இடையில் தான் அமெரிக்க அதிபர் பதவி நின்று ஊசலாடுகிறது.

அது திரும்பவும் புஷ்ஷுக்கே கிடைக்கலாம் அல்லது புதியவரான கிளின்ரனை பற்றிக் கொள்ளலாம் அந்தளவுக்கு புஷ்ஷும், கிளின்ரனும் அமெரிக்க வாக்காளர் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ஒரு அமெரிக்க ஜனாதிபதி போட்டியிடும்போது மக்களின் ஆதரவும் செல்வாக்கும் அவருக்குக் கிடைப்பது ஒன்றும் ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல, ஆனால் பதவியில் இல்லாத ஒருவர் போட்டியிடும்போது அவருக்கு பெருமளவு மக்கள் ஆதரவும் செல்வாக்கும் கிடைத்திருப்பது தான் பல்வேறு தரப்பினரையும் இன்று வியப்பிலும் சிந்தனையிலும் ஆழ்த்தியுள்ளது

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக இதுவரை நடந்த பல்வேறு கருத்துக்கணிப்புக்களிளெல்லாம் பில்கிளின்ரனே முன்னணியில் திகழ்ந்தார். ஜோர்ஜ்புஷ் இரண்டாவது இடத்தையே பெற்றார்.

எனினும் புஷ்ஷை இந்த முடிவுகள் நிலைகுலைய வைக்கவில்லை. அவர் எப்போதும் போல் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இருந்தார்.

புஷ்ஷின் இந்த மனஉறுதி அவருக்கு நல்ல பலனை இப்போது கொடுத்திருக்கிறது என்று தான் கூறவேண்டும். இறுதியாக எடுத்த கருத்துக் கணிப்பு முடிவுகளின்படி கிளின்ரனுக்கு கிடைத்த செல்வாக்கில் சரிவு ஏற்பட்டது. புஷ்ஷின் செல்வாக்கு அதிகரித்தது. அளவு இருவருக்கும் சமசமமான பலம் கிடைத்திருப்பதாகவும் தேர்தலில் இருவருக்குமிடையில் மிகக் கடுமையான போட்டி நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷே வெற்றிபெறுவார் என்று பிரபல சோதிடர் ஜீன் டிக்ஸன் ஆருடம் தெரிவித்துள்ளார்.

ஒரு மாநில கவர்னரான பில் கிளிம்ரனுக்கு அமெரிக்க மக்களிடையே இப்படியொரு செல்வாக்கு எப்படி ஏற்பட்டது? அவருடைய வயதும் இளமைத் தோற்றமும்தான் இதற்கு ஒரு காரணம் என அமெரிக்க சஞ்சிகைகள் தெரிவித்துள்ளன. குறிப்பாக அமெரிக்காவின் இளம் வாக்காளர்களின் அதிகப்படியான செல்வாக்கு கிளின்ரனுக்குக் கிடைப்பதற்கு இது அவருக்கு ஒரு போனஸ் அம்சமாகவே இருக்கிறது.

### வீனஸ்

மேலும் புஷ் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் பொருளாதார நிலையில் ஒருசரிவு ஏற்பட்டதும் வேலையில்லாபிரச்னை அதிகரித்ததும் உலகறிந்த விடயம் அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சியானது அமெரிக்க மக்களைப் பாதிக்கத் தொடங்கியது கிளின்ரன் இதைத் தனது பிரசாரத்தின் போது சாதுரியமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை. பிரசார மேடைகளில அவர் புஷ்ஷை நிலைகுலைய வைக்கும் வகையில் கேள்விகளைத் தொடுத்தார்.

கிளின்ரனின் இந்த சாதுரியமான தாக்குதலால் புஷ் நிலை தடுமாறினாலும் அவர் தன்னை சுதாகரித்துக்கொண்டு அவற்றுக்கெல்லாம் பதிலளிக்கவே செய்தார்.

எனினும் அமெரிக்க வாக்காளர்களின் கூர்மையான கண்கள் புஷ் நிலைதடுமாறிய அந்த சந்தர்ப்பங்களை மனத்தில் அப்படியே பதிவுசெய்து வைத்துக் கொண்டன.

ஈராக் மீதும் சதாம் ஹுசைன் மீதும் அமெரிக்கா படை எடுத்திருக்கவே தேவையில்லையென கிளின்ரன் பிரசார மேடைகளில் விளாசித் தள்ளினர். அமெரிக்க பொருளாதாரம் வீழ்ச்சியுற்றிருக்கும் வேளையில் 'பாலைவனப் புயல்' என்றொரு தாக்குதல் அவசியம் தானா என்றுகேட்டு அமெரிக்க மக்களையே ஒரு கணம் அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

இவையெல்லாம் கிளின்ரனுக்கு செல்வாக்கில் ஒரு அதிகரிப்பையும் புஷ்ஷுக்கு ஒரு சரிவையும் ஏற்படுத்தின.

இவற்றுக்கும் மேலாக மற்றொருவர் புஷ்ஷின் செல்வாக்கைக் குறைப்பதற்கு காரணமாக இருந்தார். அவர் வேறு யாருமல்ல புஷ்ஷுடன் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளரான றெஸ் பெரோட்.

இவர் தமது பிரசார மேடைகளிளெல்லாம் புஷ்ஷையே எதிர்த்து முழங்கினார். புஷ்ஷுக்கு எதிராக அவர் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் அவருக்குப்பயன்படவில்லை. அது புஷ்ஷின் செல்வாக்கைக் குறைத்தது என்னவோ உண்மைதான். ஆனால் அவர் தெரிவித்த கருத்துக்களினால் கிளின்ரனின் செல்வாக்கே அதிகரித்தது.

இவற்றின் காரணமாகவே இதுவரை மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புக்களில் எல்லாம் கிளின்ரன் முன்னணியில் திகழ்ந்து வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் புஷ்ஷைப் பொறுத்தவரையில் தமது ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவுக்குதான் செய்த நன்மைகளையும் ஈட்டித் தந்த பெருமைகளையும் அமெரிக்க மக்களும் உலகமும் மறந்துவிடவில்லையெனவும் அமெரிக்க மக்கள் அதற்கு நன்றியறிதலாக தம்மை மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பது நிச்சயம் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்.

புஷ்ஷின் இந்த நம்பிக்கையை நாம் புறக்கணிக்க முடியாது. அவரது தலைமைத்துவத்தின் கீழ் அமெரிக்கா பெற்ற புகழை உலகமே அறியும்.

கிளின்ரனின் செல்வாக்குடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது எத்தனையோ மடங்கு சிறந்தது. புஷ்ஷுக்கு இருந்துவரும் செல்வாக்கு சரித்திரத்தில் இடம்பெறுகின்ற ஒன்று. கிளின்ரனின் செல்வாக்கு மாற்றத்தை விரும்பும் பின்னரால் கிடைத்த ஒன்று. இதில் எது வெற்றிபெறும்? அமெரிக்க மக்கள் இதனை இன்று தீர்மானிப்பர். (இ)

---

## கோப்பாய் ஆஸ்பத்திரியில் நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசாங்க வைத்தியசாலையில் நீர் விநியோகம் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுவருவதாக சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் நீர்விநியோகம் கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்சார விநியோகமின்மையால் தடைப்பட்டு இருந்தது.

தற்போது தடைப்பட்டு இருந்த நீர்விநியோகம் பிரதேச வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பி. இரத்தினசபாபதியின் அயராத முயற்சியினாலும் கோப்பாய் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் பி ஜீவானந்தத்தின் விடாமுயற்சியாலும் கொழும்பில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் ஊழியர்களின் உதவியினால் சிறப்பாக இயங்க ஆரம்பித்துள்ளதால் ஆஸ்பத்திரியின் நீர்த்தேவைகள் பெருமளவு நிறைவேற்றப்படுகின்றது.

## மாணவருக்கு உணவு முத்திரை 5 மாதங்களாக வழங்கப்படவில்லை.

(வட்டுக்கோட்டை)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்கு உணவுப்பொருள் வழங்கப்படவில்லையென பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்

கடந்த 5 மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைகளை பெற்றோர் வைத்துக்கொண்டு தினமும் மேற்படி சங்கக்கிளைகளுக்கு அலைந்து திரிகின்றனர்

இந்த உணவுமுத்திரைகளுக்கான உணவுப்பொருள்களை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பெற்றோர் கேட்டுக்கொள்கின்றனர். (139)

## சைவசமய பரீட்சை

(கொழும்புத்துறை)

காரைநகர் மணிவாசகர் சபையினரால் வருடம் தோறும் நடாத்தப்படும் சைவசமய பாடப்பரீட்சை நவம்பர் மாதம் பிற்பகுதியில் நடைபெறவுள்ளது. (154)

## அங்கோலாவில் மீண்டும் யுத்தம்

(லுவண்டா)

அங்கோலாவில் மீண்டும் உள்நாட்டுப்போர் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதுவரை 300 பேர் உயிரிழந்துள்ளனர். உடனடியாக இந்தப்போரை நிறுத்துமாறு ஐ. நா. பொதுச்செயலாளர் நாயகம் பூத்ராஸ் காலி கேட்டுள்ளார் என செய்திகள் கூறுகின்றன. (சு)

## சந்தேக நபர் கைது

(உடுப்பிட்டி)

புலோலி கிழக்கில் கொள்ளைச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை காவல்துறையினரால் இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (150)

## முரல்மீன் குத்தி ஒருவர் காயம

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மணியம் தோட்ட கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர் மீது முரல்மீன் பாய்ந்து தாக்கியதில் ஒருவர் பலத்த காயத்திற்குள்ளானார்.

குருநகர் முதலாம் குறுக்குத் தெருவைச்சேர்ந்த செல்லத்துரை வின்சிலோஸ் (38 வயது) என்பவரே மீன் பாய்ந்து குத்தியதில் பலத்த காயத்திற்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (56)

ஆயிரம்

## நெல்லி மரங்கள் நாட்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தொழிலதிபர் க. கனகராசாவின் பிறந்தநாளையொட்டி குடாநாட்டில் ஆயிரம் நெல்லி மரங்கள் நாட்டப்படும்.

விசேட நாற்றுமேடையில் உருவாக்கப்பட்ட இம்மரக் கன்றுகள் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கோயில்கள் பொது அமைப்புகளுக்கு மிலக்கைவற் நிறுவனத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றன.

இதேவேளையில் அவரது சேவையைப்பாராட்டிஅவரது பிறந்ததினமான நேற்று அவருக்கு பலர் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (எஸ்)

## முதலாம் ஆண்டு நினைவுச் சுடர்

★  ★

காரைநகர்-களபூமி

### அமரர் சிவஸ்ரீ குமாரசுவாமிஐயர் ஜீவரட்சாயணி அம்மா

(மங்களம்மா)

| மண்ணகம்: | விண்ணகம்: |
|---|---|
| 12-10-1911 | 16-11-1991 |

(திதி- ஐப்பசி மாத பூர்வபக்ஷ நவமி)

ஆண்டொன்று போனாலும்
அன்னை எம் இதயத்தின்
நீங்காச் சுடராக நினைவலையில்
நிற்கின்ற-
அன்னையின்ஆத்மா சாந்தியடைக என
தன்னை சித்தி விநாயகனை
நித்தமும் வேண்டுகின்றோம் நாம்.

அன்புப் பிள்ளைகள்,
கு. தியாகராசசர்மா.

நீர்வேலி. (ஏ-2561)

## ★ தமிழீழத்தின் இதயமான
# மணலாறை இழப்பதற்கு புலிகள் தயாராக இல்லை
## இரா. தமிழன்பன் பேட்டி

(யாழ்ப்பாணம்)
தமிழீழத்தின் இதயமான மணலாறு மாவட்டத்தை இழப்பதற்கு விடுதலைப்புலிகள் தயாரில்லை என்று முல்லை மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் இரா தமிழன்பன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழீழத்தின் இதயம் மணலாறு. அந்த இதயத்தை குத்திக்கிழித்தால் தமிழீழத்தைத் துண்டாடி சிதைத்து விடலாம் என்று சிறிலங்கா அரசு எண்ணுகிறது. அதற்காகவே அது மணலாற்றின் மீது தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை மணலாறு உயிர் போன்றது, அந்த உயிரை இழக்க விடுதலைப் புலிகள் தயாரில்லை மணலாறு பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகவே கண்காணித்து வருகின்றனர்.

எனவே அங்கு இராணுவத்தின் அசைவுகள் பற்றி விடுதலைப்புலிகள் நன்கறிவர். தற்போது கூட அங்கு இராணுவ நடவடிக்கை நடத்தக்கூடிய ஏதுநிலை காணப்படுகிறது ராணுவ அசைவுகள் பற்றி விடுதலைப்புலிகள் நன்கு தெரிந்து வைத்திருப்பதால் அதற்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்ள தயாராக இருக்கிறார்கள்.

மணலாறு மாவட்டத்தில் அலம்பில், கொக்குத்தொடுவாய் கொக்கிளாய் போன்ற குறுகிய பிரதேசத்திற்குள் தான் சிறிலங்கா இராணுவத்தினர் முகாம்களை அமைத்துள்ளனர் இக்குறுகிய பகுதிகளுள் ராணுவத்தினர் ஒரு சிறை வாழ்க்கையே வாழ்கின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ரி)

### இன்று

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தில் ஐப்பசி 92க்கான 4ம் வார உலர் உணவு நிவாரணம் இன்று தொடக்கம் விநியோகிக்கப்படும்.

★

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் மாதாந்த கலந்துரையாடல் இன்று 3ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகல உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### பரீட்சை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளில் வருடாந்தப் பரீட்சை நடப்பதற்கு முன்பு மாணவர் நலன் கருதி பாடசாலைகளில் உரிய பாடத்திட்டங்களை முழுமையாக கற்பித்து முடிக்குமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பாடசாலை அதிபர், ஆசிரியர்களைக் கேட்டுள்ளார்.

கோட்ட, கொத்தணிப் பாடசாலைகள் பரீட்சையை நவம்பர் 30ம் திகதி டிசம்பர் 1ம், 2ம், 3ம் திகதிகளில் நடாத்தி 5ம் திகதி பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக மூடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார் (சு)

ஃ ஃ ஃ

தேசிய பாடசாலைகளைத் தவிர்ந்த ஏனைய முன்னணிப் பாடசாலைகளில் இடம் பெறவிருந்த ஆண்டு 6 க்கான அனுமதிப்பரீட்சை நவம்பர் மாதம் 16ம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என யாழ் கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (159)

### தபால் செல்லவில்லை

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கொழும்புக்கு சென்ற 'குமண' சப்பலில் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படவில்லை. (159)

### பீடாதிபதி ராஜினமா மறு பரிசீலனைக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பாலசுப்பிரமணியம் பீடாதிபதி பதவியில் இருந்து ராஜினமா செய்வதாக பல்கலைக்கழக துணை வேந்தருக்கு அனுப்பிய கடிதத்தை மறுபரிசீலனை செய்யுமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ துரைராசா பீடாதிபதியைக் கேட்டுள்ளார். (159)

### மண் மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழமீட்புநிதி இம்மாதம் 7ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர், தீவகம், சாவலைநகர், கோப்பாய் ஆகிய உ. அ. அ பிரிவைச் சேர்ந்தவர்களிடமும் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுவில், தெல்லிப்பழை. சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர். உ. அ. அ. பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமும், 9ம் திகதி திங்கட்கிழமை கரவெட்டி. பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு சாவகச்சேரி. பச்சிலைப்பள்ளி உ. அ. அ பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமும் திரட்டப்படவுள்ளது.

### யுத்தத்தை முடிவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் பேசுகையில்; டிசம்பருக்குள் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப் படவேண்டும், தற்போது இந்த யுத்தத்தால் அரசுக்கு தினமும் 27 கோடி ரூபா செலவாகிறது.

ஆகையால் இந்தயுத்தத்தை 2 மாதங்களுக்குள் நாம்முடிக்க வேண்டும் இதற்கு படையினர் எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார்.

ஏற்கனவே படையினருக்கு அரசு பல தடவை காலக்கெடு வழங்கி அவை தோல்வியில் முடிவடைந்ததும் தெரிந்ததே (சி)

### கிளாலி படகு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளாலி, கல்முனை, பூநகரி, ஆலங்கேணி கடற்பிராந்தியத்திற்கு மிக எட்டியநிலையில் இரவு நேரத்தில் கடற்படையினர் பீரங்கிப் படகுகளை நிறுத்தி பயணிகளை அச்சுறுத்தி வருவதனால் பயணிகள் பிரயாணம் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் கடற்படையினர் படகுகளை நோக்கி தாக்கக்கூடும் என அச்சத்தினால் படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பகலிலும் கடற்படையினரின் தீவிர நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது [56]

## ★ பேராதனை. மொறட்டுவ பல்கலைக்கழக பதிவிற்கு
# கால அவகாசம்

(யாழ்ப்பாணம்)
பேராதனை, மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் இதுவரை பதிவு செய்யாத மாணவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்தி ஒன்றை கொழும்பில் தற்போது தங்கியுள்ள யாழ் அரசாங்க அதிபர் கா மாணிக்கவாசகர் யாழ் செயலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; யாழ். மாவட்டத்திலிருந்து பேராதனை, மொரட்டுவ பல்கலைக்கழகங்களுக்கு பதிவு செய்யாத மாணவர்கள். தாங்கள் பல்கலைக்கழக பதிவாளருக்கு அனுப்பிய கடிதங்களின் தொடர்பு இலக்கங்களோடு தனித்தனி மேன் முறையீடு செய்யுமாறும்,

இந்த மேன்முறையீட்டுக் கடிதங்கள் யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் உடனடியாக கையளித்தால் 3-ம், 4-ம் திகதி புறப்படும் குமண கப்பலில் அவர்கள் கொழும்புக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். (சு)

### அடுத்து வரும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

புலிகள் பற்றிய தப்பான கணிப்பீடுகள் பாரிய எதிர் விளைவைத் தோற்றுவிக்கலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது (சி)

### மன்னிப்புச் சபையிடம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சபையிடம் பெற்றோர்கள் கோரியுள்ளனராம்.

மட்டக்களப்பில் கடந்த காலங்களில் காணமல் போனவர்கள் விபரங்களை சேகரிக்க சென்றுள்ள இருவரடங்கிய இக்குழுவை மேற்படி தமிழ் இளைஞர்களின் பெற்றோர்கள் சந்தித்துள்ளனர்.

இதுபற்றி மன்னிப்புசபை மிகுந்த அக்கறை காட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### கிழக்கில் 90 தமிழ்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

35 பேர் காணாமல்போய் விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒக்ரோபர் 19ம், 20ம் திகதிகளில் பாதுகாப்பு படையினர் தேடுதல் நடவடிக்கையொன்றின்போது மூன்று தமிழ் கிராமங்களைச் சுற்றிவளைத்து 90 தமிழ் இளைஞர்களைக் கடத்திச் சென்றனராம்.

கடத்தப்பட்டவர்களில் 25 பேர் இதுவரையும் தமது வீடு திரும்பவில்லை என்று அவர்களது உறவினர்கள் புகார் தொவித்துள்ளனர்.

காணமல் போனவர்களின் உறவினர்கள் அருகிலுள்ள இராணுவ முகாம்களில் இவர்கள் பற்றி விசாரித்ததாகவும் ஒருவரும் கைது செய்யப்படவில்லை என்றும் இத்தினங்களில் தேடுதலே இடம்பெறவில்லை எனவும் தம்மிடம் இராணுவ அதிகாரிகள் கூறியதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநடவடிக்கையை எந்த இராணுவப் பிரிவு நடத்தியது என்பது தனக்குத்தெரியும் என்று மட்டக்களப்பு தமிழ் எம். பி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபையினர் மனித உரிமைமீறல் குறித்த அரசின் நடவடிக்கையை கண்காணிப்பதற்காக கிழக்கு மாகாணத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ரி-சி)

### ஆயிரம் ஆரம்ப ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)
1,000 ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் இம்மாதம் முதல் நியமனம் பெறவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

150 ஆரம்ப ஆசிரியர்களுக்கு நேற்று நியமனம் வழங்கப்பட்டது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (க)

### வெலிகந்தையில் தனியார் பஸ் மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)
காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பஸ் மீது நேற்று முன்தினம் வெலிகந்தையில் வைத்து இனந்தெரியாதோர் துப்பாக்கி தாக்குதல் நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பஸ்ஸில் சென்ற சில, காயமடைந்ததாகவும் சில நிமிடநேரம் அப்பகுதி துப்பாக்கி வேட்டால் அதிர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாம். (சி)

### பிரிட்டிஷ் அரசும்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

ணங்களினால்தான் இந்த புதிய சட்டம் அமுலுக்கு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டத்துக்கு எதிராக பல மனித உரிமைகள் குழுவினர் குரலகொடுத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

### லண்டனில்' இருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கனவே தென் இந்தியாவிற்கு தப்பி ஓடிவிட்டதாகவும் அங்கு அகதிமுகாம்களில் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜே. வி பி. இயக்கத்தை புதுப்பிக்க தீவிர முயற்சிகள் மேறகொள்ளப் படின் அதனை முறியடிக்க வேண்டுமென பொலிஸ் தலைமையகம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும உத்தரவு வழங்கியுள்ளது. (சி)

### ஸ்ரீலங்கா படைகளில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரப் அடிக்கடி கூறிவருகிறார்.

இந்த அழைப்புகளை நிராகரித்த முஸ்லிம் இளைஞர்கள் பலர் படையில் சேர்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

படைகளில் சேர்வதற்கு முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆர்வமின்மையால், முஸ்லிமகள் வசிக்கும எல்லைப்புறக் கிராமங்களைப் பாதுகாபபது பெரும் சிரமம் என்று இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.


## தமிழீழ காவல்துறை
# பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமைகள் | : | 8ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர் தரம்) வரை. |
| உயரம் | : | 5, 6". |
| வயது | : | 18 தொடக்கம் 30 வரை. |

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 05-11-1992ம் திகதி வரை, நாவலர் வீதியிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண்/பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும் நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
காவல்துறை,
தமிழீழம்.

(எ 2557)



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/